பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் லாபகரமககச் செயல்பட வாய்ப்பு இல்லை என்ற காரணத்தால் வங்கிகள் கடன் வழங்க வில்லை. மேலும் அது ஒரு கூட்டாலை நிறுவனமாக இருப்பதால் அரசு உத்தரவாதம் வழங்க முன்வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன,

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சனைகள்

### (அ) துணைக்கேள்விகள் கேட்க அனுமதி அளிப்பது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். கேள்வி நேரத்தின்போது பல கேள்விகளுக்கு நான் துணைக் கேள்வி கேட்க கையை உயர்த்திக் கொண்டிருந்த போதிலும் தாங்கள் அனுமதிக்கவில்லை. தாங்கள் வேண்டுமென்றே அப்படிச் செய்தீர்கள் என்று நான் சொல்லவில்லை. உங்கள் முன்னால் இருக்கிற மைக் உங்கள் பார்வையிலிருந்து என்னை மறைக்கிறது என்று நினைக்கிறேன். அதனால் நான் கை தூங்கினாலும் உங்கள் பார்வையில் படுவதில்லை. அது மட்டுமல்ல. எங்கள் பார்ட்டியில் கூட ஒரு துணைக் கேள்விக்கு தாங்கள் இடமளிக்க வில்லை. ஆகவே, இனிமேல் அம்மாதிரியான நிலைமை இல்லாமல் தாங்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பேரவை உறுப்பினர்கள் எனக்கு ஒத்துழைக்க வேண்டும். நான் கேள்வி நேரத்திற்கென்று ஒரு மணி நேரமும் 20 நிமிடமும் எடுத்துக் கொண்டிருக்கிறேன். எப்போதுமே ஒரு மணி நேரத்திலேயே நான் முடித்துவிடுவதில்லை. பலருக்கும் வாய்ப்புத் தரவேண்டும் என்ற அடிப்படையில் நேரத்தை எப்போதுமே நீட்டித்து இருக்கிறேன். இருந்தாலும் சிலருக்கு வாய்ப்புக்கள் வராமல் போகலாம். அப்படித் தவறுவது இயற்கை. நீங்கள் வேண்டு மானால் ஆய்வுக் குழுவிலே எடுத்துச் சொல்லி கேள்வி நேரத்தை இரண்டு மணி நேரம் என்று ஆக்குங்கள். ஆகவே என்னால் முடிந்த வரை எல்லோருக்கும் வாய்ப்பு தந்துகொண்டுதான் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன் வரிசையிலே உள்ளவர்களாவது கொஞ்சம் திறமையாக சுருக்க மாகக்கேள்வியைக் கேளுங்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 20]

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, கேள்வி நேரத்தின் போது முன் வரிசையில் உள்ள தலைவர்கள் கொஞ்சம் திறமையாகக் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும் என்று சொன்னீர்கள். அப்படியானால் பின்னாலே இருப்பவர்கள் எல்லாம் திறமையற்றவர்களா? அந்த வார்த்தை அவைக் குறிப்பிலே இடம் பெற வேண்டுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்-

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்கு விளக்கம் தந்தேன், அதை நீங்கள் பெரிதாக எடுத்துக் கொண்டால் நீக்கிவிடத் தயார். முன் வரிசையிலே உள்ள தலைவர்கள் கொஞ்சம் சுருக்கமாக திறமையாகக் கேள்வியைக் கேளுங்கள் என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, முன்வரிசையிலே உள்ளவர்கள் திறமையாகக் கேட்க வேண்டும், என்ற அந்தப் பகுதியை நீக்குவது என்பது அவ்வளவு சரியாகாது. முன் வரிசையிலே உள்ளவர்கள் திறமையானவர்கள் என்ற காரணத்தாலேதான் தலைவர்களாக வந்திருக்கிறார்கள். ஆகவே திறமை என்ற வார்த்தை எடுக்கப்படுவது சரியாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தாங்கள் வேறொரு உறுப்பினருக்கு பதில் சொன்னபோது இந்த வார்த்தை சொல்லப் பட்டது. ஆகவே இதை இப்போது விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதென்பது பொருத்தம் அல்ல. முன்வரிசையிலே உள்ள வர்கள் திறமையாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அந்த வார்த்தை இருக்கவேண்டுமானால் இருக்கலாம். அது பின் வரிசையில் இருப்பவர்களைப் பாதிக்காது. வேண்டாம் என்றால் விட்டுவிடுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தாங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் உங்களுக்கும் எனக்கும் இடையிலே மைக் இருப்பதால் சில வேளைகளில் தங்களால் கவனிக்க முடியாமல் போய் விடுகிறது. இருந்தாலும் எங்களது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கூட இன்று கேள்வி கேட்க அனுமதிக்கப்படாதது வருந்தத்தக்கது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் அவ்வாறு நடக்காமல் பார்த்துக்கொள்கிறேன்.